**Judicial Form No-53**
**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 4, THOOTHUKUDI.**

**Case No CC 167 / 2018**
**Prosecution Witness –PW 7 , LW 10**

| | | | |
|---|---|---|---|
| Name: | சுந்தரமகாலிங்கம் | Caste: | |
| Father's Name : | குருசாமி | Calling: | ிடி |
| =-llage: | | Religion: | |
| Taluk: | தூத்துக்குடி | Age: | 60 |

**( Accused absent. 317 Crpc petition filed and allowed. )**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2019.20.08.2024**

**சாட்சி நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**

**முதல்விசாரணை :**

நான் காவல் துறையில் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2016 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்த போது ராமகிருஷ்ணன் என்பவர் நேரில் ஆஜராக கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 59 / 2016 ச/பி 406, 408 IPC ஆக வழக்கு பதிவு செய்து அன்றைய தினமே புகார்தாரர் ராமகிருஷ்ணன் , கௌதமன், சரவணன், ஏ.ராமகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த வழக்கின் ஆவணங்களை பார்வையிட்டு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் 14.12.2016 அன்று காலை 08.00 மணியளவில் எதிரியை அவரது வீட்டில் வைத்து கைது செய்து சாட்சிகள் கிராம நிர்வாக அதிகாரி செல்வகுமார், குமாரலிங்கம் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி சாட்சிகளிடம் வாக்குமூலம் பெற்று எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

பின்னர் நான் 21.12.2016 அன்று தூத்துக்குடி கனரா வங்கி மேலாளர் இளங்கோவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . நான் பணி மாறுதல் சென்று விட்டதால் வழக்கின் கோப்பினை உதவி ஆய்வாளர் திரு . ஆறுமுக நயினார் அவர்களின் பார்வைக்கு வைத்தேன் . இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

லாயல் டெக்ஸ் மில்லின் உரிமையாளர் இந்த வழக்கில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . லாயல் டெக்ஸ் மில்லின் உரிமையாளர் யார் என்று எனது முதல் கட்ட விசாரணையில் துலங்காது என்றால் சரிதான் . இந்த வழக்கின் புகார்தாரர் எம். ராமகிருஷ்ணனுக்கு லாயல் டெக்ஸ் மில்லின் உரிமையாளர் அனுமதி உத்தரவோ , அல்லது சம்மத உத்தரவோ மற்றும் பொது அதிகாரம் கொடுத்ததாக புகார் மனுவுடன் சேர்த்து கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

நான் எனது முதல் கட்ட விசாரணையில் அ.சா.1 யை விசாரிக்கும் போது லாயல் டெக்ஸ் மில்லின் உரிமையாளரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.சம்பவம் 02.02.2013 முதல் 2016 வரை நடைபெற்றதாகவும் , புகாரானது 07.11.2016 அன்று பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான் . பொதுவாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புகார் மனு பெற்றப்பட்டால் அதை 7 தினங்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டுமென்றால் சரியல்ல . மேற்படி நிறுவனத்தின் ஆடிட்டிங் அறிக்கைகள் மற்றும் அந்த ஆடிட்டர் யார் என்ற விபரம் புகார் மனுவில் இல்லை என்றால் சரிதான் .அந்த ஆடிட்டரின் அறிக்கை மற்றும் அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

லாயல் டெக்ஸ் மில்லில் வருடந்தோரும் ஆடிட்டிங் உண்டு என்ற விபரத்தை அ.சா.1 யிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் என்னுடைய விசாரணையில் துலங்காது. நான் மேற்சொன்ன ஆடிட்டிங் விபரங்களை அ .சா.1 என்னிடம் தெரிவித்தார் என்றும், அதற்கான தகுந்த ஆவணங்களை என்னிடம் அறிக்கையாக தாக்கல் செய்தார் என்றும் அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு எதிராக இருந்ததால் நான் எனது முதல் கட்ட விசாரணையில் அதை மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் வேறு சக அலுவலர்கள் குற்ற நம்பிக்கை துரோக செயலில் ஈடுபட்ட அனைவரையும் புலன் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகாரில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் மேற்படி புகாரில் கூறியது போல் சக அலுவலர்கள் குற்ற செயலில் ஈடுபட்டது எனது முதற் கட்டவிசாரணையில் தெரியவில்லை . இந்த வழக்கில் மதுரை உயர் நீதிமன்றத்தில் சந்திரசேகர், கருப்பையா, ராய், சங்கரநாராயணன், தினேஷ் என்ற தினேஷ் குமார் CRL OP (MD) No. 5442 / 2017 dated 28.04.2017 , CRL OP (MD) No.

467 / 2017 dated 14.02.2017 ன் படி முன் ஜாமின் பெற்று தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 இல் சரணடைந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . மேற்படி சொன்ன 5 நிறுவனத்தினை சேர்ந்த உரிமையாளர் எந்த விதமான கூடுதலான பணம் 1 மற்றும் 2 வது எதிரிக்கு வழங்கவில்லை என்றால் சரியல்ல . அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் 2 வது எதிரிக்கு TMB. சங்கரன் கோவில் கிளையில் கணக்கு இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் சங்கரன்கோவில் கிளையின் மேலாளரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . நான் விசாரித்தது தூத்துக்குடி TMB வங்கியின் மேலாளர் கௌதமனை விசாரித்தேன்.

(வழக்கறிஞர் சாட்சியிடம் தொடர்பு இல்லாத கேள்விகளை கேட்டு நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் வகையில் நடந்து கொண்டார்.)

ஒம்/–V.C.குபேரசுந்தர்,

நீதித்துறை நடுவர் எண். 4,
தூத்துக்குடி.